THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 5th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M.A.MANICKAVELU) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Death of an employee in M|s. Fenner Cockill Limited

* 121 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether representations have been received requesting the Government to hold a judicial enquiry into the circumstances under which the death of one Velu, an employee in Messrs. Fenner Cockill Limited at the Erskine Hospital at Madurai on 29th May 1968, has occurred; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஏற்கெனவே, மதுரை வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தி வருவதாலும் தொடர்புடைய காவல் துறைத் துணை மேற்பார்வையாளர் வேலையிலிருந்து தாற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளதாலும், தலைமைக் கான்ஸ்டபிளும் மற்றும் மூன்று கான்ஸ்டபிள்களும் மதுரை நகரத்திலிருந்து வேறிடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதாலும், இந்நிகழ்ச்சி குறித்து நீதி விசாரணை நடத்துதல் பொறுத்தமற்றது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. டி. சந்தோஷம் : தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு அந்தப் போலீஸ் அதிகாரி மீது கிரிமினல் வழக்கு தொடரப் பட்டிருக்கிறதா ? அது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் மீது குற்றப் பத்திரிகை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மருத்துவ மனையில் டாக்டர்களின் கவனிப்புக் குறைவால் வியாதியஸ்தர்கள் மரணம் அடைகிறதாகவோ அல்லது வியாதி முற்றுவதாகவோ தெரிந்தால் அந்த டாக்டர்கள் தண்டிக்கப்படும் வகையில் பரிசீலனை செய்து அதற்கான வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்புடையதல்ல.